
சிவாஜி கணேசன்
அளிக்கும்...
பிரபுராம்
பிக்சர்ஸ்
விடிவெள்ளி
கதை, வசனம், டைரக்ஷன் ஸ்ரீதர்
10
MOHANARTS

# கதைச் சுருக்கம்

வாழ்க்கையில் நீங்கள் சந்துருவைப் போன்ற ஒருவனைப் பார்த்திருக்க முடியாது. தன் தங்கை வாழவேண்டுமென்பதற்காக, வாழ்க்கையில் ஒரே ஒரு முறை தவறு செய்கிறான். மாப்பிள்ளையின் வீட்டார் கலியாணத்திற்கு முன் தினம் வைர நெக்லஸ் போட்டால்தான் கலியாணம் என்று சொன்னவுடன், தன் தங்கையை வாழவைக்க திருடி விடுகிறான். அவளை, அவள் கணவனோடு ஊருக்கு அனுப்பி விடுகிறான், இதன் நடுவில், சந்துருவுக்கு மதருஸில் வேலை கிடைத்து விடுகிறது. தாயை அழைத்துக் கொண்டு மதருஸிற்கு போய்விடுகிறான். அங்கே சந்துருவுக்கும் முதலாளி மகள் சித்ராவுக்கும் காதல் ஏற்படுகிறது.

இதன் நடுவில்—

தன் தங்கையின் கழுத்திலிருந்த வைர நெக்லஸ் ஒரு தடவை கீழே விழுந்து, அந்த நெக்லஸிலுள்ள லாக்கெட்டில் ஒரு வாலிபனுடைய போட்டோவை, சீதாவின் கணவன் ரவி பார்த்துவிடுகிறான். அது யாரென்று கேட்க, தனக்குத் தெரியாதென்று சொல்லி, தான் உண்மையானவள் என்று கதறுகிறாள். சந்துரு தன் ஆபீஸில் ஒரு லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட இருந்ததைத் தடுத்து நிறுத்தியதற்காக, முதலாளி கொடுத்த பணத்தில் வேறொரு நெக்லஸை வாங்கிக்கொண்டு சீதாவைப் பார்க்க வருகிறான். அங்கே ரவி, அந்த நெக்லஸிலுள்ள போட்டோ யாரென்று கேட்க சந்துரு திடுக்கிடுகிறான். சந்தேகம் ரவியின் இதயத்தைப் போர்த்தி விடுகிறது. சீதாவை சந்துருவோடு அனுப்பி விடுகிறான்.

பின்பு—

சித்ரா, சந்துருவை காதலிப்பதை அறிந்து, சித்ராவின் தந்தை, சந்துருவை வேலையிலிருந்து நீக்கி விடுகிறார். சந்துரு எப்படியாவது, ரவியின் சந்தேகத்தைப் போக்கி சீதாவை வாழவைக்க வேண்டுமென்று துடிக்கிறான். ஒரே ஒரு வழிதான் அவனுக்குப் புலப்படுகிறது. நேராக நெக்லஸை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று சரணடைகிறான். மறுநாள் நெக்லஸை பெற்றுக்கொண்டு போக வந்திருப்பவர்களைப் பார்த்ததும் சந்துரு திடுக்கிடுகிறான். ஏனென்றால் நெக்லஸுக்கு உரியவள் சித்ராதான் என்பதையறிந்து வேதனைப்படுகிறான். சித்ரா, தான் அதை சந்துருவுக்கு அன்பளிப்பாக கொடுத்ததாகச் சொல்ல, சப்-இன்ஸ்பெக்டர் சந்துருவை விடுவிக்கிறார். சந்துருவுக்குப் புது நம்பிக்கை பிறக்கிறது.

தன் தாயிடமும், தன் தங்கையிடமும் சொல்லிவிட்டு, ரவியை அழைத்துக்கொண்டு வர திருச்சிக்குச் செல்லுகிறான். அங்கே ரவியிடம், ஒரே ஒருமுறை தன்னுடன் வந்தால் ரவியின் சந்தேகத்தை போக்கிவிடுவதாகக் கெஞ்சுகிறான். அவன் சரியென்று சொல்லி, சந்துருவோடு புறப்பட, இருவரும் சித்ராவின் வீட்டிற்கு வருகிறார்கள். அங்கே சித்ராவை சந்தித்து, அவள் கழுத்திலுள்ள நெக்லஸை கழட்டி, அந்த நெக்லஸிலுள்ள, வாலிபனுடைய போட்டோ யாரென்று கேட்க, அது ராணுவத்திலிருந்த இறந்து போன தனது சகோதரனுடையதுஎன்றும், அவன் நினைவாக அதை வைத்திருப்பதாக சித்ரா சொல்லுகிறாள். அப்பொழுது மறைவிலிருந்த சித்ராவின் தந்தை, அந்த நெக்லஸிலுள்ள போட்டோ தன் மகனுடையது அல்ல என்றும், தனக்கு மகனே கிடையாதென்றும் சொல்ல, எல்லோரும் திடுக்கிடுகிறார்கள்.

பின்பு—

சந்துருவால் தன் தங்கையை வாழவைக்கமுடிந்ததா?
சந்துருவின் காதல் என்னவாயிற்று?





இயற்றியவர் : | பாடியவர்கள் :

**கண்ணதாசன்** | **ஜிக்கி, P. B. சீனிவாஸ்**

பெண்: பண்ணோடு பிறந்தது தாளம்—குல
பெண்ணோடு பிறந்தது நாணம்
பண்ணோடு பிறந்தது தாளம்

ஆண்: கண்ணோடு கலந்தது காட்சி—அந்த
கலையாவும் பெண்மையின் ஆட்சி
மண்ணோடு மலர்ந்தது மானம்—குல
மகள் கொண்ட சீதனம் யாவும்
பண்ணோடு பிறந்தது தாளம்—குல
பெண்ணோடு பிறந்தது நாணம்
பண்ணோடு பிறந்தது தாளம்

பெண்: செல்வோம் என்றே ஆசை எண்ணும் அங்கு

ஆண்: செல்லாமலே கால்கள் பின்னும்

பெண்: செல்வோம் என்றே ஆசை எண்ணும் அங்கு
செல்லாமலே கால்கள் பின்னும்

ஆண்: சொல்வோம் என்றே உள்ளம் ஓடும்

பெண்: வார்த்தை சொல்லாமலே இதழ் மூடும்
பண்ணோடு பிறந்தது தாளம்
குல பெண்ணோடு பிறந்தது நாணம்

பெண்: ஒரு நாளும் பாடாத உள்ளம் இந்த
உறவாலே இசையோடு துள்ளும்
ஒரு நாளும் பாடாத உள்ளம் இந்த
உறவாலே இசையோடு துள்ளும்

ஆண்: படிக்காத பாடங்கள் சொல்லி—முன்பு
பழகாத கல்விக்குத்தான் இந்தப் பள்ளி

இருவரும்: காணாத கதை இன்று காண்போம் அதை
கண்டாலே பேரின்பம் தோன்றும்
காணாத கதை இன்று காண்போம்

இயற்றியவர்: **2** பாடியவர்:

**அ. மருதகாசி** **சுசீலா**

எந்நாளும் வாழ்விலே கண்ணான காதலே;
என்னென்ன மாற்றமெல்லாம் காட்டுகின்றாய் ஆசை நெஞ்சிலே
(எங்)

கண்ணாலே காணுகின்ற காட்சியெங்கும் நீ நிறைந்தாய்;
எண்ணாத இன்பமூட்டும் அன்பு என்னும் தேன் பொழிந்தாய்;
உன்னாலே எந்தன் உள்ளம் துள்ளித் துள்ளி ஆடுதே;
எல்லைமீறி நிலைமாறி சல்லாப கானம் பாடுதே; (எங்)


உன் முன்னே ஜாதி பேத வாதமெல்லாம் சாய்வதில்லை;
ஊரெல்லாம் ஓய்ந்த போதும் நீ உறங்கி ஓய்வதில்லை;
மண் மீது நீயில்லாது வாழும் ஜீவன் இல்லையே;
மலர் மேலே மனம் போலே உலாவும் இன்பஜோதியே! (எங்)


இயற்றியவர்: 3 பாடியவர்கள்;

**கண்ணதாசன்** **ராஜா, சுசீலா.**

**ஆண்:** இடை கையிரண்டில் ஆடும்
சிறு கண்ணிரண்டும் மூடும்
உயிர் தன்னை நீங்கி ஆசையில்

தாவி ஓடுமே மூடும்—காதல்
கீதம் பாடுமே;





பெண்: விழி மூடும்போதும் பார்க்கும்
இதழ் தூங்கும்போதும் பேசும்
இடை சாயும் போதும் காதலின்

சாரம் கூறுமே...ஆசை
கீதம் பாடுமே;

பெண்; அந்தி நேரம் வந்தாலே
காதல் வேகம் உண்டாகும்
பெற்ற தாயைக் கண்டபோதும்
நெஞ்சில் கோபம் உண்டாகும்

ஆண்; பிறர் பார்த்துவிட்டாலும்
பெண்மை நாணம் கொண்டாடும்
அதைப் பார்க்க பார்க்க காளை நெஞ்சில்
போதை உண்டாகும்;

பெண்: சிறு பிரிவுமில்லாமல் இன்பச் சிறகுகளாலே
ஒரு முடிவுமின்றிப் பறந்து செல்வோம்—


பறவைகள் போலே


ஆண்: ஒரு பேதமில்லாமல் சேர்ந்த காதலினாலே
நாம் உறவுகொண்டு உயிர் கலந்தோம்

ஒருவரைப்போலே

இருவரும்: இனி காலமெங்கள் காலம்
சுக வாழ்வு எங்கள் வாழ்வு
உயர் பூமியெல்லாம் காதலின்

மேடை ஆகுமே—தென்றல்
கீதம் பாடுமே;







இயற்றியவர்:
அ. மருதகாசி

பாடியவர்கள்:
ராஜா, திருச்சி லோகநாதன்
சுசீலா, ஜிக்கி

கொடுத்துப் பார் பார் பார் உண்மை அன்பை;
நினைத்துப் பார் பார் பார் அதன் தெம்பை;
உயர்வு தாழ்வெனும் பேதத்தைப் போக்கும்;
இருவர் வாழ்வினில் இன்பத்தைச் சேர்க்கும்; (கொடுத்து)


கண்ணுக்குள் மின்னல் வெட்டைக் காட்டுகின்ற கண்ணம்மா;
கன்னத்தில் ஆப்பிள் வந்து காய்த்திருப்ப தென்னம்மா?
உண்பதற்காகுமா? உன் பசி தீருமா?
உள்ளதைக் கேட்டாலே என்மீது கோபமா? (கொடுத்து)

கற்பனை உங்களுக்கே சொந்த மென்ற எண்ணமா?
சர்க்கரைப் பாகு உங்கள் நாவில் வந்ததென்னமா?
பிறவியில் வந்ததா? பெண் அன்பு தந்ததா?
இரவெல்லாம் உறவாடும் கனவாலே சேர்ந்ததா? (கொடுத்து)

ஆட்டத்தில் தோகையோடு போட்டி போடும் முல்லையே;
ஓட்டத்தில் என்னை நீயும் வெல்வதற்கு இல்லையே;
தோற்றத்தில் முல்லை நான்; ஓட்டத்தில் புள்ளிமான்;
போட்டியும் போட்டாலே தவறாமல் வெல்லுவேன்: (கொடுத்து)

உன்னாலே எந்தன் உள்ளம் ஊஞ்சல் போல ஆடுதே;
பின்னாலே சுத்திச்சுத்தி(த்) தாளமெல்லாம் போடுதே;
காலத்தின் கோலமா? காதலின் ஜாலமா?
காணாத புது வாழ்வு கண் இன்று காணுதே! (கொடுத்து)







இயற்றியவர் : குு. மா. பாலசுப்ரமணியம்

பாடியவர்கள் : ஜிக்கி, திருச்சி லோகநாதன்

பெண்; காரு—சவாரி—ஜோரு
கையாலே தீண்டிடாமே பேசிடுங்க சாரு

ஆண்; காரு—சவாரி—ஜோரு
கண்ணாலே பேசிடாமே ரோட்டைகொஞ்சம்
பாரு அங்கே நீ பாரு

இருவர்; காரு—சவாரி—ஜோரு (காரு)

பெண். காரோடும் பாதையெல்லாம்
கல்லும் முள்ளும் உண்டு

ஆண்: காதலர் பாதையிலும்
கஷ்டம் நஷ்டம் உண்டு

பெண்: ஸ்டேரிங் என் கையிலுண்டு

ஆண்; சிந்தையில் ஆவலுண்டு

இருவர்; நேரான பாதை போனால் ஆனந்தமே (காரு)

பெண்; அர்ஜெண்டா பிரேக்கு போட்டால்
வண்டி கெட்டுப் போகும்

ஆண்; ஆசைக்கு பிரேக்கு போட்டால்
ஹார்ட் பஞ்சர் ஆகும்

பெண்; ஓரத்தில் போகவேண்டும்

ஆண்; உள்ளங்கள் சேர வேண்டும்

இருவர்; மாறாத பண்பினாலே பேரின்பமே ! (காரு

இயற்றியவர் : 6 பாடியவர் :

அ. மருதகாசி ஜிக்கி

நினைத்தால் இனிக்கும் சுபதினம்—இதில்
கனவுகள் காணுது என் மனம்

அவை பலித்திடும் நலமளித்திடும்—புதுப்
பாதையில் என்னைச் சேர்த்திடும் (நினைத்தால்)

தேடிவரும் எனை நாடிவரும்—பெரும்
செல்வம் யோகம் சேரும்

தேன் கமழும் மணமாலை தரும்—என்
சிந்தையில் இன்பம் சேரும்

ராணியைப்போலே வாழுவேன்
நாடியதெல்லாம் வாங்குவேன்
மானில வாழ்வே ஆனந்த மென்று
கானம் பாடி ஆடுவேன் (நினைத்தால்)

கோடையிலே குளிர் வாடை தரும்
கொடைக்கானலில் வாசம் செய்வேன்

கொஞ்சிடுவார் எனைக் கெஞ்சிடுவார்—பொய்க்
கோபம் ஊடல் கொள்வேன்

நாளொரு புது கார் வாங்குவேன்
நான் மிக ஜோராய் ஓட்டுவேன்
மானில வாழ்வே ஆனந்தமென்று
கானம் பாடி ஆடுவேன் (நினைத்தால்)



இயற்றியவர் : 7 பாடியவர் ;

அ. மருதகாசி சுசீலா

எந்நாளும் வாழ்விலே கண்ணான காதலே !
என்னென்ன மாற்றமெல்லாம் காட்டுகின்றாய் ஆசை நெஞ்சிலே!
(எந்)

கண்ணாறக் கண்ட காட்சி கானல் நீராய் மாறிப் போமோ ?
என் உள்ளம் கொண்ட இன்பம் என்னைவிட்டு நீங்கிப் போமோ?

கண்ணீரே சொந்தமாகும் காலம் வந்து சேருமோ?
கலையாத துயர் மேகம் என்வாழ்வில் என்றும் சூழுமோ? (எங்)
உன்னாலே எந்தன் உள்ளச் சோலை மீண்டும் பூத்திடாதோ?
என்னாசை அன்பரோடு என்னைக் காலம் சேர்த்திடாதோ?
மின்னாத பொன்னைப் போலே நானும் இங்கே வாழ்வதா?
உனையன்றி துணையின்று என்வாழ்வில் யாரும் இல்லையே! (எங்)

இயற்றியவர்: கண்ணதாசன் பாடியவர்: ஜிக்கி

நான் வாழ்ந்ததும் உன்னாலே
நிலை தாழ்ந்ததும் உன்னாலே
கண்ணீரினில் ஆடும் வாழ்வினில்
வேதனை சூழ்ந்ததும் உன்னாலே (நான்)

விண் வெளிமீதே வெண்நிலவை நீ
விளங்கவும் வைத்தாயே நீ
விளங்கவும் வைத்தாயே
ஒளி விளங்கிடும் வேளை பனித்திரையாலே
பாதையை மறைத்தாயே
வாழ்வெனும் ஓடம் ஆடிடும் வேளையில்,
மூழ்கவும் செய்தாயே (நான்)

கவலையினாலே வாடிய மலரை
கைகளில் எடுத்தாயே மலர்
புதுமணம் வீசி மகிழ்ந்திடும் வேளை
பூமியில் எறிந்தாயே
சேவையிலே நான் வாழ்ந்திருந்தேன்
எனை சோதனை செய்தாயே (நான்)

என்னுயிர் தெய்வம் எனை மறந்தாலும்
நான் உனை மறவேனே
இரு கண்களை காக்கும் இமைகளைப்போலே
காத்திருப்பேன் மகனே
என் ஆசைகள் யாவும் நீ என நான் இனி
வாழ்வதும் உன்னாலே (நான்)

